
ஸ்ரீ மாத்ரே நம:
ஸ்ரீ காமாட்சி சரணம்





இயற்றியவர் : ஜகம்தாம்பாள் பாட்டி



தொகுப்பு: திருமதி. சரஸ்வதி தியாகராஜன்

# தொகுப்புரை

பாட்டி யின் புகுந்த இடம் ஆறுபாதி என்ற ஒரு சிறு கிராமம். தஞ்சை ஜில்லாவில் உள்ளது. சிறு வயதிலிருந்தே பகவத் த்யானத்தில் இருந்தவர்கள். சின்ன வயசில் ராமர் க்ருஷ்ணர் போன்ற தெய்வங்கள் பற்றி பாட்டுகள் தானாகவே வாயில் ராகத்துடன் வருமாம். ஒரு தடவை வந்தால் பிறகு மறக்காதாம். இதெல்லாம் என் வீட்டுப் பெரியவர்கள் சொல்லித் தெரியும். ஒரு முறை பாட்டி தன் அக்கா திருவலன்சுழிக்கு (ஸ்வாமிமலை செல்லும் கிராமத்தில் இருக்கிறது) இரவு 10 மணியளவில் ஒரு வேலையாகச் சென்றிருக்கிறார்கள் . அங்கு ஒரு அறிமுகம் இல்லா ஒரு ஸ்த்ரீ படுத்திருப்பது கண்டு தன் அக்காவிடம் யார் எனக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் திருக்கருகாவூர் பந்துலு ஐயர்(அந்தக்கால frrdom fighter) அகத்து மாமி என பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்த அம்மா முகத்தைப் பார்த்த என் பாட்டிக்கு அவர்கள் தலை மேல் ஓர் ஒளி வட்டம்(halo) தோன்றியது தெரிந்ததாம். அந்த நிமிஷமே அம்பாள் வாராஹி ரூபமாக என் பாட்டிக்கு ஷோடஷி உபதேசம் ஆகிவிட்டதாம்! ஆனால் பாட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை. அம்பாளைப் பற்றித் தானாகவே ராகத்தோடு பாட ஆரம்பித்துவிட்டார்கள்! அதன் அர்த்தம் ஒன்றும் தெரியாது. காஞ்சிப் பெரியவரிடம் போய்க் கேட்டதற்கு உனக்கு உரிய முறையில் நான் உனக்கு ஒரு மடத்தின் தலைவர் என்பதால் எனக்கு உரிமையில்லை. ஶ்ரீசாந்தானந்த ஸ்வாமிகளிடம் போய் முறைப்படி மந்த்ர உபதேசம் பெற்றுக்கொள் என்று சொன்னாராம். அதன்படி சேலம் சென்று ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்றுக்கொண்டாராம் என் பாட்டி! அது முதல் அம்பாள் பேரில் நூற்றுக் கணக்கான பாட்டுகள் தானாகவே ப்ரவாகமாக வரும். ஒரு தடவை வந்து விட்டால் மறக்கவே மறக்காது. ஆனால் என் சித்தி தங்கள் உபயோத்துக்காக ஒரு நோட் புஸ்தகத்தில் எழுதி வைத்திருந்தாள். அதில் சில பாகங்களே கிடைத்தன. கிடைத்தவற்றை இங்கே பகர்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்

ஒரு முறை கல்கத்தாவுக்குச் செல்ல வேண்டிய அவசியம். பாட்டி தன் அம்பாள் அடங்கிய பித்தளை டப்பாவை தன் பெரிய பெண்ணிடம் பூஜை செய்யச் சொல்லிக் கொடுத்துச் சென்றாள். பெரியமா ரொம்ப ச்ரத்தையா பூஜை செய்வார்கள். ஊரிலிருந்து வந்ததும் பெண் வீட்டிலிருந்து எடுத்து வர நினைத்திருந்தாள். அன்றிரவே அம்பாள் ஸ்வப்பனத்தில் வந்து உன் பெண் உன்னைவிட நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள் நான் அங்கேயே இருக்கேன் என்று சொல்லிவிடவே , இன்னொரு டப்பாவில் அம்பாளை ஆவாஹனம் செய்து, அதில் பூஜை செய்து வந்தார்கள்.பாடகர் விஜய் சிவா குடும்பத்தில் ஒன்று இருக்கிறது. என் ஒன்று விட்ட சித்தி குடும்பத்தில் ஒன்று இருக்கிறது. எல்லாரும் ச்ரத்தையா பூஜை செய்யறவர்கள். இந்த வீட்டில் பாபானாசத்தில் எனக்கு எட்டு வயசில் வேப்பன் செடியிலிருந்து அம்பாள் எழுந்து தர்சனம் கொடுத்தாள். அதன் பின் ஜல் ஜல் என நடந்து உள்ளே செல்வதைக் கண்ணால் கண்டேன். என் பாட்டியிடம் சொன்னபோது தம்பிக்கு ஜுரம், அதான் அம்பாள் வந்திருக்கா என்று சொல்லி கொசு வலையைத் தூக்கிப் பார்த்த போது நிறைபாரமாக அம்மை போட்டிருந்தது! இதை நான் கண்ணால் கண்ட உண்மை.வீட்டில் பூஜை நடக்கும்போது வீட்டில் அவ்வளவு பூஜா த்ரவ்யங்கள் வந்து குமியும். பலர் கண்களுக்கு அம்பாள் தர்சனமும் கிடைத்துள்ளது. ஆனால் அந்த பூஜை டப்பாவில் என்ன இருக்கிறது என்பது என் பாட்டி தவிர யாருக்கும் தெரியாது! திறந்தால் அதன் வீர்யம் உங்களுக்குத் தாங்காது என்பாள்.

அவள் கடைசி காலம் வந்த போது அவளுக்கு 93 வயது. ஒரு தைப்பூசம் அன்று லேசாக சோர்வாக இருந்தாள். கண்கள் மூடியபடியே கால ஒரு 7 மணி சுமாருக்கு தன் பையன் கணேசன் பெயரைச் சொல்லி அழைத்து, முருகன் வந்திருக்கான் வழி விட்டு நில் எனச் சொல்லி பின் முருகனிடம் பேசத் தொடங்கினாள்! அப்பா முருகா நீ சிறுவன் உன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது, மலை படி ஏற வேண்டாமா மெள் ளக் கைபிடித்து அழைத்துசெல் என்று கூறியவாறே கண்களை மூடி மீளாத் துயில் ஆட்கொண்ட தெய்வம் அவள்! ஜோதியாய் முருகனிடம் கலந்து விட்டாள். அம்பாளும்முருகனும் ஒரே சக்தி அம்சம் அல்லவா?

திருமதி. சரஸ்வதி தியாகராஜன்

`ஶ்ரீ தேவி துணை

விருத்தம்

தந்தி முகனே யான் உந்தன் தாளிரண்டையும்  போற்றி
வந்தனம் செய்து கோரி வருந்தியே முன் பணிந்தேன்
அம்பிகை மகிமை தன்னை ஆவலாய் எடுத்துரைக்க,
தும்பிக்கையான் எனக்கு துணையாய் வந்து உதவி செய்

விருத்தம்

சர்வ குரு நாதன் பூஜித்த சக்தி பரமேச்வரி
கௌரி சிவ சங்கரி திரிபுரசுந்தரி மூகேஸ்வரி
சடாக்ஷரி ஷோடசாக்ஷரி துஷ்ட ஸம்ஹார வீரி
பக்தஜன தயாபரி ஸர்வலோக ஸஞ்சாரி
பஞ்சப்ரேத ஆசனத்தில் அமர்ந்த
பத்ரகாளி என்ற நாமமுடையவளும்
அவளே அவளே அவளே

விருத்தம்

சக்தியாய் வடிவம்  கொண்டு  சாந்த குணத்தோடமர்ந்து    பக்தர்கள் மீதன்பு
கூர்ந்துபார்தனில்  மெய்யாய்   விளங்க  அஷ்டகரத்தோடு  சிங்கவாகனம்
விட்டிறங்கி  அற்புதஸ்வரூபத்துடனே  அம்பிகே வருகிறாளதை  பாரீர்!  பாரீர்!
பாரீர்  பாரீர்! பாரீர் பாரீர்

பாட்டு ராகம்: மோகனம்

மகிழ்ந்து வருகிறாள் மஹேஸ்வரி
மண்டலம் எங்கும் அதிர்ந்திட மனம் (மகிழ்ந்து)

புகழ்ந்த பக்தர்கள் முன்னால் பரிந்து
ஜொலிக்க ,சிரித்த முகத்துடனே (மகிழ்ந்து)

மகிழ்ந்து வருகிறாள் பாரீர்!
முத்து மூக்குத்தியும் மின்ன வஜ்ரகிரீடம் தகதகவென கோடி சூர்ய ப்ரகாசமாய்
எங்கும் பளீர் பளீரென ஜெகஜோதியாய் மின்ன (மகிழ்ந்து)

கங்கணம் வளை குலுங்க கண்டசாரம் பளீரென அசைந்திலங்க காலில்
தண்டை சிலம்புகள் ஒலி கலீர் கலீர் என்றுதைத்து (மகிழ்ந்து)

அம்பிகை வாணியை வேண்டி மனதன்புடன் மோஹனம் பாடி நம்பிடும் யான்,
பெண் பேதைக்கு அருளுடன் சிம்ஹாஸனம் விட்டிறங்கி ஆனந்தமாய்
( மகிழ்ந்து)

விருத்தம்

லக்ஷ்மி கடாக்ஷம் துலங்கி அத்புத பொற்பீட ரத்ன
மணிமண்டபத்தில் விளங்கு சக்தியே,
சதாசிவமாய் ஓங்கியே நின்ற மெய்ப்பொருளே ,மெய்ப்பொருளே
அறிந்தறியாத அபலையான் எனக்கருள் புரிவாயே
அகிலாண்ட ப்ரம்மாண்ட ஸ்வரூப வடிவே
ஆதியே ஜோதியே ஆனந்த பூரண கருணைக் கடலே...
பெண் பேதையான் வேத சாஸ்த்ர நல்தத்வ வித்தைகளின் விவரம்
அறியேனே அறியேனே...
ஆதியோடு அந்தமாய் விளங்கிட, எடுத்துரைக்க வருவாயே...

விருத்தம்

மஹிஶனை வதைத்த மஹா வீராதி வீரியே வீர கம்பீரியே
மாயஸ்வரூபியே மணிமந்த்ர சேகரியே
இப்பாரினில் உன் ப்ரபாவ கவியை எடுத்துரைத்தேன்
பிழை பொறுத்து அனுக்ரஹம் செய்குவாயே செய்குவாயே
கோரினேன் அனுதினமும் உன்னடி சரணம் சரணம் சரணம்
ஸ்ரீ ஷோடாசாக்ஷரியே சக்தியே உமையே சரணம்...

பாட்டு

காரணம் உரைப்பேன் அம்மா யான் இங்கு வந்த ( காரணம் உரைப்பேன்)
காரணம் உரைத்திட மாதரே, சேய் உனது கோரிக்கையால் இங்கு
வந்தேன் மனம் உருகி கோரிக்கையால் இங்கு வந்தேன் .

சாந்தானந்த தவ யோகி பூஜித்த சிவ ( சாந்தா )

சக்தி யான் என்று அறிந்து கொள்ளாய் ஓ மாதரசே ( சக்தி யான் )

துர்கா ஷியாமளா பாலை லலிதா காளியும் யானேதானம்மா
உலகில் பத்ர ( காளி )

அஞ்சாதே எந்தன் மாதரசே யான் உந்தன் அடியில் துணையாய் வருவேன்
உனது குலக்குடியில் குதிர்ந்தமர்வேன்.

சத்குருநாதன் மெச்ச சற்குணவதி நீயே சங்கரி சரஸ்வதி நீயே சசியும் நீயே

( சத்குருநாதன் )

காரணமாக இந்த பூமியினில் ஜனித்த கல்வியே எனதின் அன்பே செல்வச்
சிறப்பே ( கல்வியே )

முன்பிறப்பினில் தவ முனிவர் களித்த உந்தன் வாக்கின் காரணமே அம்மா
உணர்த்த உந்தன் ( காரணமே )

வஞ்சகமாய் உந்தனை நிந்தித்தோரை எந்தன் கைவாளுக்கு இறையிடுவேன்
அவரை பல வாதனைகளும் செய்குவேன்

விருத்தம்

காரணமாக இந்த பூமியில் அவதரித்த தேவியும் நீதான் என்று தெரிந்திட யானுரக்க வராகியாய் வந்துமே உந்தன் வைபோக வாழ்க்கையின் சரித்திரம் தன்னை இப்பார்தனில் பிரசங்கம் செய்துமே உந்தன் பரிதாபம் தீர்ப்பவள் யானே யானே யானே யானே யானே

விருத்தம்

இன்று மும்மலம் வருந்தி ஏங்கியே உருகி நொந்து புண்ணான துயரே அம்மா பொற்கொடியே. எனதின் அன்பே இரு கண்ணையும் கொடுத்த தெய்வம் காட்சிகள் தந்திடும் என்றே நம்புவாய் இதுவே சத்தியம் நாகமே எந்தன் கண்ணின் மணியே மணியே மணியே மணியே மணியே

மற்றுமோர் ஜென்மாவினில் மகரிஷி ஆகிய பக்தனும் மனோன்மணி ஆகிய இப்பெண்மணியை மணம் புரிந்தும் மனதினில் இச்சித்த மோக சோகங்களை தீர்த்து புத்ர சந்ததிகளை பெற்று போகங்களை அனுபவித்து உலகம் எங்கும் சிவசக்தி இவள் என்ற அறிய

கியாதிகள் பெற்று வாழும் காரண தேவி இவள் என்றும் ஈசன் இனியும் இவர்களுக்கு இச்ஜென்மம் இத்துடன் முடிவு பெற்ற தென்றும் மாரி வேறு ரூபம். வேருருவரும் கொண்டு உங்கள் மனையதில் வந்தார் ஈசன்.

பாட்டு

அன்னமே உன் மனை கதியாய் ஈசன் வந்தார் அதிபசி என்றும் அப்போ

( அன்னமே )

அன்னமே ஈசனும் உன் மனையில்அவர் வேதியர் போல் பரிசோதனை செய்திட பெண் ( அன்னமே )

மன்னனும் நீயும் மனமுவந்து தினம் அம்பிகை துதி செய்திடும் காரணம் என்னவென்று ஈசன் அறிந்து அப்போது அவர் அந்தணராகவும் சங்கர சம்போ

வென்று  பாடி மங்கையே உங்கள் மாளிகை தேடி அதிபசியாலவர்  முகமது வாடி அன்னம் அறிந்திடா வென்றும் உங்களை நாடி (அன்னமே )

மெத்தவம் புரிந்து முனிவர் முன்பு சக்தியே உன்மேல் மோகித்து அவர் பின்பு மற்றுமோர் ஜென்மம்  நல் பக்தன் ஆகியபோது உத்தமி உன்னை மணம் புரிந்து முன்பு  சித்தமோக சோகம் மறந்து ஒற்றுமையாய் இருவரும் மனமுவர்ந்து இத்துலக ஆசா பாசம் துறந்து இருக்கும்  உங்கள் பூர்வம் அறிந்த ( அன்னமே )

விருத்தம்

திக்கு வேறில்லை என்று சத்தியமாய் உன்னை நம்பி தத்தளித்து கலங்கி பித்தனை போல் புலம்பி யான் கத்தியே கூவிடும் குரல் சற்றுமுன் செவியில் கேளாமல் மெத்தவும் மௌனமே

சிவசக்தியே என் மீது உனக்கு வன்மமோ யான் முன் செய்த கர்மமோ இது உனக்கு தர்மமோ அறிந்திலேனே மெல்லியலால் வருந்துகிறேனே. கல்லோ இரும்போ  பெரும்பாறையோ  உனதின் உள்ளம்  இல்லையோ கருணை கொஞ்சம் ஏழையின் மீது  நெஞ்சம்  தஞ்சம் என்று

உந்தன் அடியை  சதம் என்ற அடுத்த அடியாள் என்மேல் வஞ்சகம் செய்து உந்தன் சிந்தை இறங்காத தேனோ பேதைமேல் வாது செய்து பரிசோதனை செய்வதென்ன  நியாயமோ இதுவும் என்ன மாயமோ உன் நீதி தானோ  தாரூரல் தானேன் இனியான் படும் துயரம் என்ன

தற்காத்தருள் புரியாவிடில் உலகில் தரியேன் தரியேன். என்னுயிர் இனி விடுவது உண்மை இதுவே. ஸ்வர்ண மயமாய்ஜொலித்து சிங்கத்தின் மீது அமர்ந்த சோடசாக்ஷரியே உமையே யான் உன் அடைக்கலம் அடைக்கலம் உன்னடி சரணம் சரணம் என்னை ஆதரிப்பாய் இதுவே நல்ல தருணம் தருணம்.

அகில லோக பிரதாபியே சகல ஜீவ காருண்ய தேவியே நீ இந்த அவனியில்மெய் யுருவாய் விளங்கி எனக்கு பயன் அளிக்க வந்தாயே.

உன்னை நினைத்து யான் பற்பல வகையிலும் துதித்துப் பாடி ஸ்மரித்தும்உன் திருவடியை நாடிட தினமும் பஜித்திட எனக்கு பேரறிவை அளிப்பாய்

கலைவாணியாய் என் வாக்கில். ( வருவாய்)

விருத்தம்

மூலமுதல் பொருளாக முந்தி வந்து அவதரித்து ஆதிப்பரம் பொருளே உமையே.... நீ..... வேதப்பொருளாகிய மெய்ப்பொருளே. ஜெகன் மாதாவே உந்தன் பாதம் சரணம் சரணம்.

ஏதுமறியாததோர் பெண் பேதையால் எந்தன் நாவில் வேதப் பொருள் ஆகி நின்று நீயும் பாடியே கூறியது வீண் பொய்தானோ இதன் வகையதை. எனக்குரைப்பாய் பகவதியே என்னை ஈன்ற தாயே தாயே

பக்தர் தமக்கருள் அளிக்க வென்று இப்பார்தனில் மெய் உருவமாக வந்தேன் என்றே நீ சத்தியமாய் உரைத்த மொழி உண்மையானால் சிவசக்தியே நீ இத்தருணம் என் முன்பு குதித்தோடி வருவாய் நீ வருவாய் வருவாய் .

தூண்டில் முள்ளதில் சிக்கித் துடித்திடும் மீனது போல யான் மாய கவலையதில் சிக்கிய என் மனம் மிக வருந்தி உருகி கதறுகிறேன் வாய்விட்டலறி கருணை என் மீது உனக்கு இன்னும் வரவில்லையோ வரவில்லையோ

சிரித்து முப்புறமதை எரித்தோர் இடபாகமதில் விளங்கி இவ்விரேழு பதிநான்கு. லோகங்களையும் தாங்கி தவறாமல் சகல ஜீவ கோடி களையும் காத்து என்றும் குறையாமல் படியளக்கும் குண்டலி சக்தி பார்வதியே உனக்கு அபயம் அபயம் அபயம்.

அல்லும் பகலுமாக அபயமிட்டு அலரும் என் குரலும் உந்தன் செவியினில் கேளாமல் நீயும் இப்போ... கல்வியும் செல்வமும் சகல சக்தியும் நாமே என்று சித்தத்தில் கர்வம் கொண்டு மெத்தவும் அகத்துடன் இருப்பதுவும் தர்மமோ உன் கருணை இதுவோ இதுவோ.

பூமியும் ஆகி ஆகாயமாகி மலையும் ஆகி வைரமும் ஆகி மாணிக்கமும் ஆகி கண்களாகி அக்கண்களுள் ஓர் ஆபரணமும் ஆகிக் கலையாகி கலைஞானமும் ஆகி பெண்ணாகி பெண்களுக்கு ஆணும் ஆகி உலக முடிவுக்கு அப்பாலே மோக்ஷலோகமாகி எண்ணாகி எண்ணுக்கு ஓர் எழுத்துமாகி அருட்சுடராய் விளங்கிய சிவபெருமான் இருக்கின்றவாரே

ஈட்டியினால் குத்தி நீ நிறுத்திய போதிலும் உன்னை யான் ஒருகாலும் விடுவது இல்லை. உன்னை யான் ஒரு காலும் விடுவதில்லை. ( 3முறை )

சின் மயமாகிய எனதுள் மணியே சிவசங்கரியே நீ இவ் வையகம் அதிலும் ஒரு பெண்மணி ஆகி வந்த உண்மையும் இதுவென்றாலும் கந்தனை கூட்டி நீ வந்ததென் வாக்கில் பிரணவ செந்தமிழாக நின்று உன் சுந்தர திருவாய் அதை மலர்ந்தே குரு மண்டலமதிலும் அரிய விண்டுரை செய்குவாய் இவ்வண்ட பிண்ட சராசரமெங்கும் ஒன்றாகி. நின்றிட்ட திருவே திருவே.

பஞ்சப்பிரேதாதிகள் பொன் மஞ்சமாகி அதில் அதில் உல்லாசமாய் சிங்க வாகனமதில் அமர்ந்த சங்கீதப் பிரிய சிவசக்தி மணியே. (1)

தவயோகி மகான் உனது அவயங்கள் அவைகளை தனது ஆத்மமதில் அடக்க அதில் ஐந்தெழுத்துருவாகி ஓர் எழுத்தில் உயிர் பெற்று எழும்பிய ஓம்கார சக்தி மணியே. (2)

ஓம்கார ரூபிண்ய உள்ளம் ஒளிதரும் பூர்ண மதியே ரவியே நல் சுகம் தரும் தவ குருவே தத்வ ஞான வேதாந்த மணியே எனை ஆட்கொண்டருள் செய்த ஆதிபராசக்தி மணியே. (3)

சித்ரூப ஜெகம் காத்த மயமே என் சுதந்திரமே சதாசிவலயமே அடியார்க் கபய வரப்பிரதாப ஜெயமே என் அகமகிழ் வினோத மணியே. ஹரன் அதி காதல் கொண்டனை திட்ட மோகன சக்தி மணியே. (4)

மகேஸ்வர மனோரஞ்சித மாமண மலரே தகுந்த கந்த கஸ்தூரி கதம்ப பரிமள நீலோற்பல கோமளமே எந்தன் சித்தமதில் அதி விஸ்தாரமாய் வசித்தின்ப ரசம் தந்தமணியே. சந்ததம் என் என்னுள்ளினில் நின்றாடிப்பாடிய ரீங்கார சக்தி மணியே. (5)

காலபயம் தோன்றி கடும் துயர் கொண்டு உன்னை கூவி ஓலமிட்டு அலறிக் கதறிய உத்தமர்கள் விபத்தகற்றி உயிர்பித்தெழுப்பி காக்க சத்தியம் கைகொண்டுலகில் வெற்றி பெற வந்த மணியே. (6)

உன் சரணமே கதி என்ற என் குலத்துணையாய் கங்கணம் கொண்ட விஜய சீல வீரசக்தி மணியே.. (7)

கருவாகி உருவாகி கலியிலோர் காரண பாவையாகி எனதெதிரினில் தோன்றி என் உள்ளம் கவர்ந்தொலித்த அன்பே அன்பே. திருவே என்குல குருவே மறைவாகி நின்ற மாயா வினோத மணியே. தானம் செய்து என்னில் நீ தானாகி நின்ற சக்திமணியே (1)

ஏழை எனது எதிர் தோன்றி என்னில் நிலை நீயாகி ஆயக்கலை 64 நான்கும் என் நாவில் சிறு அருவியாகி பெருகி அருள் அமிர்த கடலாகி ஆனந்த அலை உண்டாகி மன மோகன மான சங்கீத புன்னகை முக மலர் ஒளியும் திவ்ய காட்சியை களித்துலக சாட்சியாய் என் என்னுள்ளினில் பீஜாரக்ஷரமதில் அமர்ந்தற்புத புகழ் மகிழ்ந்துரைத்த பிரம்மானந்த சம்பூர்ண சாம்ராஜ்ய சக்தி மணியே.... (2)

அக்ஷர ஸ்ரீ சக்கரமதாய் அலங்கரித்து என் மேனிதனை உன் உச்சித பொன்பீடமதாக்கிய என்னுள் நாவின் தன்னை உன்- அற்புத- அற்புத அற்புத- அற்புத ஸ்வரூபமதன் வக்ஷ த்தளமதினில் உன் அக்ஷய ஜெயமென்றமர்ந்தேன் அங்கமதில் எங்கும் நவசுந்தரி நீயாகி (3)

பகிரங்கமாய் துலங்கி எங்கும் பிரசங்கமாகி விளங்க வந்துதித்த எனதன்பே அருள் மணியே திரு அவதார சக்தி மணியே... (4)

பாட்டு ராகம் :சிந்து பைரவி

அபலையை நாடி அமர்ந்துளநின்றாடி ,திர அருள் புகழ் பாடிய மாயா மதுர கானமே ஞான இன்ப ரசமே எனதுள் நின் அன்பே தேனே என் ஆவியினுள் நிலைத்தோங்கத் துவங்கிய நாத சங்கீத அமிர்த பானமே (அபலையை)

தத்வ வஸ்துவே தவ சித்தர்கள் ஜெபித்திடும் ஜீவ முக்தியின் மூல முதல் மந்திரமே பராசக்தி சதாசிவ லயமே பாருக்கோர் காரணமே பரிபூரணமே தயசாகரமே மோகனமே (அபலையை)

குருமணியே குல நவமணியே சகலகலா உயிர்மணியே ஓம்கார பஞ்சரத்ன மணியே சிறு நாரியை தன்உருவாக்கிய பிரம்ம ஞான ஸ்வரூபமணியே (2)
திரிசூலம் தன்னைக் கர வீணையாய் மாற்றி உன் மீட்டும் சங்கீத பிரதாப சீலமணியே ( அபலையை)

விருத்தம்

குருவே அளித்த வாக்கு பழித்தென்றும். வீண் பொய்போமோ கவலையேன் வீணில்சும்மா கலங்கியே நீ பதறிடாதே. கூரிட்டதோர் ஈட்டியும் வாளும் கபாலமும். சூலத்தோடு ஏரிட்டதோர் பெரும் இருகண்ணும் கடும் பார்வையும் ஆகி வீரிட்ட கூச்சலிட்டு விரித்ததோர் சிகையோடிங்கு நான் வருவேன் அம்மா. இந்த ஈரேழு உலகமும் நடுநடுங்கிடவே.

பாட்டு

வந்தேன் வந்தேன் அன்னமே வருந்தாதே இனி (வந்தேன்)
உன்தன் மனன்வருந்த உரைத்த பலர் சொல் எந்தன் அங்கங்களை துளைத்து அம்பு போல் தைத்து உருகி (வந்தேன்)
வீர சக்தி ஸ்வரூப வராகி யாக உன்தன் தாபங்கள் தீர்த்திட பெண் பேதை வாக்கில் உதித்து (வந்தேன்)
தேவியாகிய உந்தன் திவ்ய சரித்திரம் தன்னை அளந்த மாயி முகாரி பாட உந்தன் அருகில் (வந்தேன்)

விருத்தம்

தேவி என்று தத்துவ ஞானத்தால் அறிந்த சாந்தானந்தமே ஜெபித்து உச்சரித்த மதுவாகிய- சக்தியின் உயிர் மந்திரம்.

வகிப்பவள் சிவசங்கரி நீயே என்றே....
ஓதியே உனக்கு உபதேசித்து உண்மையின் புலம் அறிவித்தும் உந்தன் நாதன் சொல்மீறாமல் நடந்திடுவாய் இதுவே சத்யம் என்றே. கீர்த்தி பெற உனதின் வாழ்க்கையின் சரித்திரம் வெகு நேர்த்தியாய்

விளங்கிடுமென்றே. வாழ்த்தியே வரம் அளித்து இவ்வையகம் விட்டகன்று தன் உயிர் தியாகமானார்.....
வாழ்த்தியதோர் சொற்கள் மெய்யாய் வையகமதில் விளங்க
கூறியோறும் இப்பெண் பேதை வாக்கில் வசித்துரைத்திட வந்தேன்
வந்தேன் வந்தேன்  வந்தேன்...

பாட்டு

வந்தவள் வராகி யான் என்றறிவாய் வஞ்சியே உந்தன் சஞ்சலம்
தளர்த்திட (வந்தவள்)

இந்த உலகினில் நீயே தெய்வம் அறிந்தவர்களுக்கு பேரின்பம் தந்து
அருள்புரிந்திட .உந்தன்கடும் துயர் தீர்த்திட இங்கு (வந்தவள்)

பக்தியை புகழ்ந்துரைக்க பக்த உத்தமர்களுக்கு அன்பளிக்க  பராசக்தி நீ
என்று அறிவிக்க உன்னை பகைத்தவர் கருளரிக்க பாரினில் ஜெயம்
கொடுக்க  உன் நேரில்  உன்முன் (வந்தவள்)
.கத்தி வாள் சூலம் கபாலம் கரத்தில் தாங்கி ஓங்காரியாய்
வளர்ந்தோங்கி சாமள மேனியாய்  துலங்கி
நாகமே உன் மீது பிரம்மானந்தம் பொங்கி (வந்தவள்)

விருத்தம்

பொங்கி யான் இங்கு வந்த புலமதை அறியச்சொல்வேன்

பொற்கொடியே.... உனது பூர்ண பூஜா பக்தியதற்கு அடிமையானேன் பக்த சிரோன்மணியே யான் உன் சத்துருக்களை அழிக்க  உக்ரக வீர தீரத்தோடு ஓம்காரி உருவம்  கொண்டேன்....

ஓம்காரி என்றுமே தயங்கி நீ கலங்கிடாதே மாதரசே உந்தனோடு மனையதில்  சூழ்ந்தும் ஆனந்தமாய் வசித்து  பூரணகளையோடு ஜெகஜோதி ஸ்வரூபியாய் சிங்க வாகனம தில் வீற்று ஜொலித்திருக்கும் சோடசாக்ஷி யானம்மா  மங்கையே எனதின் அன்பே.....

மங்கையே உமையே உந்தன் மனதினில் துயர் தாளாமல் பாஞ்சாலி அவள் நீயாக பதறியே வருந்தி நீயும் கூறிய சபதம் தன்னை கோரியான் முடித்தும் உந்தன் குலமதில் அருமையாகி நிலையாக என்றும் சார்ந்த சார்ந்துன்

மகிமையை அவனியில் மகிழ்ந்துமே புகழ்ந்துரைப்பேனே ....

மகிமையை மகிழ்ந்துரைப்பேன் மங்கையே உன் (மகிமையை)

அகில அண்டங்கள் புகழ்ந்த ஆதிசக்தி நீ என்றுந்தன் (மகிமையை)

உன்னையல்லாதோர் தெய்வம் உலகினில் வேறில்லை என்றே
சிந்தையில் ஆனந்தமாய் சிவசங்கரி நீ என்றறிந்துன் (மகிமையை)

தென்மதுரை தன்னில் வாழும் தேவி உமை மீனாட்சி நீயே உன்
காட்சியை உலகறிய சாட்சியாய் என்று உரைத்தேன் சாட்சியானேன்
சாட்சியாய் ஆனேன் என்றுரைத்தேன் (மகிமையை)

கௌரி பார்வதியும் நீயே சர்வலோக வாசினியே கலியினில்
காரணமான தேவி நீ கல்யாணியே உன் (மகிமையை)

விருத்தம்

கலியில் நீ தெய்வம் என்ற காரணமதை இந்த பாரில்உள்ளோர்கள் அறியப் பாடியே யானும் இப்போ பாவையே நீயே தேவி பார்வதி என்றுன் வரலாறு இவ்வையகத்தில் செப்புவேன் உன் மகிமையை ஒப்புவேனே...

பாட்டு

பார்வதி என்றுன்னை பாரில் உரைக்க வராகியாக இங்கு வந்தேன்
பரதேவி என்றுந்தன் மகிமை அறிந்தே பரதேவி என்றும் தன் மகிமை
அறிந்தெந்தன் சிந்தை அதில் மகிழ்ந்தேன்.

முன்பில் தவமுனி உன் வடிவை கண்டு மோகித்து மோகித்துன்னை விரும்ப முனிதாபங்கள் தீர்க்க மறுஜென்மமதில் வரேன் என்றும் வாக்களிக்க

பூஜித்த முனிவர்முன் ஜோதியாய் நின்ற ஜெகதீஸ்வரியே உமையே நீ உலகமதில் கலிதேவியாக வந்த காரணப் பெண்மணியே

பாலை கன்னியாதேவி பூஜை செய்த அன்னமே பெண்மணியே உன்னை என்றும் இணைபிரியாமல் யான் காத்திடவந்தேன் என் கண்மணியே

வஞ்சி அஞ்சாதே உந்தனின் உள்ளம் கலங்கி இனி கொள்ளாதே நீ மனம் சஞ்சலம் கொள்ளாதே இதோ வந்தேன் பார் பல வகை ஆயுதத்துடன் பாரினில் உன்னை பகைத்தவர்கள் தலைமுளையை த் தின்றிடுவேன் அவர் ஆவிதனை பெரும் தீயில் இட்டு பல ஆக்ஞைகள் செய்திடுவேன் கூறிட்ட ஈட்டிகளால் அவர்களை குத்தி கிழித்து விடுவேன். குடல்அதை ரத்தத்தை பானம் செய்து ஹாரமாய் பூண்டிடுவேன்.

நெஞ்சம் பிளந்து நிரம்ப உறிந்தவர் வேரை அறுத்திடுவேன் பேருலக்கை கலப்பையினாலே அடித்து எமலோகம் அனுப்பி விடுவேன் தஞ்சம் என்று உன்னை பணிந்தவர்கள் மன சஞ்சலங்கள் தவிர்ப்பேன். அவர் பக்கம் அதில் துணையாக நின்று என்றும் ரட்சித்து அருள் புரிவேன் உத்தம பக்தியதில் சிறந்த மகாதத்துவ மறைப்பொருள் நீ தேவி சக்தி சரஸ்வதி லட்சுமி நீயான அன்பு தம் மெய்ப்பொருள் நீ

விருத்தம்

அற்புதமானதோர் நல்தத்துவப் பொருள் நீயேயான உத்தம சிரோன் மணியே..... மணியே......... மணியே.....

உந்தன் அற்புத சரித்திரம் தன்னை அவனியில் எடுத்துரைக்க இத்தகையில் இனியாரும் இல்லை என்றும் உந்தன் சித்தமதில் மகிழ்ச்சி கொண்டு உந்தன் பக்தியை வெளிவிட்டு உரைத்துமிப்போ உத்தம இஞ்ஞானியின் வாக்கில் தத்துவம் என்ற அம்ருதபொருளை அக்ஷரங்களாகிய வஸ்துக்களினால் எடுத்தூட்டினேன் இப்பேதையின் நாவினில் நிலைநாட்டி நிலைநாட்டினேன்

விருத்தம்

பேதையின் வாக்கினால் உரைத்ததோர் வாக்கியபொருளான துந்தன் மகிமையின் இனிமையான கருணாம்ருத சரித்திரம் தன்னை கருணா.....ம்ருத......

சரித்திரம் தன்னை செவியால் கேட்டவர்கள் சித்தமது பரிசுத்தமாகி பக்தியது பெருகி முக்திபலம் பெறுவது நிச்சயமென்றே நிச்சயம் மென்ற லோக உத்தம பக்தர்கள் உன்னடியை நம்பியே பணிந்து துதி த்திடுவார்..... இனி தினமும் பூஜித்திடுவார்....

பூஜித்துமே துதித்துமுந்தனை சிந்தனையில் நினைத்தவர்கள் நெஞ்சினிலுள்ளதோர் அகமதை அழித்து மதமதை கழித்து நல் சுகமதை தேடிடும் பேரறிவை அளித்து கலைவாணியாய் வீணாயுதத்தோடு அவர்கள் வாக்கினில் நின்றே வசித்து பாணியாய் நாவினில் கடவது போல் பொங்கி பெருகியே வருகுவேன் சிவசக்தியான அவர்களுக்குள் புரிகுவேனே .

பாட்டு

சக்தி என்றவள் யாளி ஈரட்டு அம்சத்தோடே மிக மட்டுமில்லாமல் மகிழ்ந்தேன் அன்னமே உன் மனையினில் யான் வசித்து அருள் பெருகியே உந்தன் மகிமை தன்னை உரைக்க கருணை புரிந்துந்தன் அன்னமே மீது கலைவாணியாக வந்தேன்..

எட்டி ரண்டும் அரியாதோர் ஏழை வாக்கில் உதித்துன் அற்புத சரித்திரம் தன்னை... ..அன்னமே.

ஆனந்தமாய் தானம் செய்து வசித்திட உன்மனையில் இருப்பிடமாய் என்தனை அமர்த்திடுவாய் தனித்தே.... அன்னமே.

நல் சுகத்தை நீயே பெருவாய்.. உன் மகத்துவமதை இந்த ஜெகத் எங்கும் அறிய உரைப்பவன் யான் எந்தனை ,அன்னமே சரஸ்வதி என்றறிவாய் ஆதியோடந்தமுந்தன் பூர்வமதை விளங்க ஓதிட யானுமிங்கு... அன்னமே உமையே உன் முன்பில் ...

விருத்தம்

உமையே பார்வதியே இந்த உலகமதை காத்து ஆதரிக்கும் மாதாவே.. மாதாவே.. மாதாவே... மாதாவே...

சற்குணாநிதியே சர்வ லோக சரண்யே பூர்ண கருணைக்கடலே கல்வியே செல்வமே சிறப்பே அறிவே எந்தன் உயிர்நிலைக்குயிராகிய வஞ்சியே பெண்மணியே ,அன்னமே கிளியே உந்தன். பூர்வத்தின் வரலாற்றை புலமாகவே அறிய ஆதியோடந்தமாய் விளங்க ஓதிடயானும் இப்போ வாணியாய் வடிவம் கொண்டு பாணியில் வீணையை மீட்டினேன் சுருதி கூட்டினேன்.

வீணையை மீட்டி உந்தன் வைபோக வாழ்க்கையின் சரித்ரமதை இப்பேதையின் வாக்கினில் நின்றே பிரம்மானந்தமாக திவ்ய ராக சங்கீதங்களினால் பாடி யான் உரைப்பேன் இப்போ பாவையே கேளாய் நீயே ஆதி நீ ஜோதி நீ அகில லோகப்பிரதாபியும் நீ அண்ட பிண்ட சராசரமெங்கும் ஒன்றாக நிற்பவள் நீ திரி நேத்ரதாரியான பரமனின் தேவி பார்வதியும் நீயே இப்பாரை ஓர் அடியாய் அளந்த திருமாலின் சகோதரியும் நீ மாலினி நீ திரிசூலியும் நீ மாயாஸ்வரூபியும் நீயே அஷ்டதிக்குகள் எங்கும் விஜயம் செய்து ஜெகத்தை ஆதிபராசக்தியும் நீயே

ஓம்காரி ஹ்ரீம் காரி ஶ்ரீம்காரியும் நீயே துஷ்ட்ட மகிஷனை வதைத்த மகா வீரபத்ரகாளியும் நீயே.. நீயே.. நீயே.. மரகத திருமேனியுடைய தென்மதுரை மீனாட்சியும் நீயே உந்தன் காட்சியை உலக பிரசங்கம் செய்துமே யாவர்க்கும் சாக்ஷியாய் வாணி சரஸ்வதியாய் உன் முன்பில் வந்தேன் ... வந்தேன்... வந்தேன்...

பாட்டு

வந்தேன் உந்தன் முன்பின் கலைவாணியாய்...... (வந்தேன்)

வந்தேன் உந்தன் முன்பில் கலைவாணியாய் ........ (வந்தேன்)

தந்தேன் உனக்கே நல் பதவி... இந்தா ... அண்ட ரக்ஷகி நீ என்றோதி எந்தனின் உள்ளமுருகி.... சங்கீத வெள்ளம்பெருகி மந்தகாசமாய் உலாவி... மங்கையே உந்தனை மேவி....( ம)....... (வந்தேன்)

உத்தமி உன் மீதில் முன்பில் இச்சித்தமாமுனிவர் மற்றொரு ஜென்மாவதினில் பக்தையாய் அவதரித்து சக்தியே உன்னை மனந்தா விருத்தாந்தமதை குறித்து.... விஸ்தாரமாய் யானுனக்காக..... . (வந்தேன்)

ஸற்குரு உரைத்த சத்ய மொழி விளங்க ....

சரித்திரம் எங்கெங்கும் துவங்க வையகப்பிரசங்கம் செய்ய வஞ்சியே உன் முன்பில் திவ்ய சங்கீத சாகித்தியம் செய்து..... இந்நங்கையின் நாவில் அமர்ந்து........ (வந்தேன்)

விருத்தம்

சத்குருவாகிய சாந்தானந்தமே உந்தனை சிவசங்கரி நீயே என்றே ஸ்தாபித்துரைத்த சத்தியவாக்கிது விளங்கிடயானும் இப்போது

அக்ஷரஸ்வரூபமாய் இகுஷ்ஷியத்தினில் வசித்துமுந்தன்

அற்புதா ...... அற்புதா.....

சரித்திரமதன் பூர்வ விருத்தாந்த மதையும் நல் தத்வார்த்தமாக திவ்ய சங்கீத சாகித்தியம் செய்து பிரம்மானந்தமாக வீணா காணத்தோடுரைப்பேன் எந்தன் காரிகையே நீயே கேளாய்... காரிகையே கருணைக்கடலே மறைபொருளாக வந்தவதரித்த மாணிக்கமே உன் மீதில் முன்பில் மோகித்த முனிவர் அவர் மற்றுமோர் ஜென்மாவினிலோர் உத்தமனானவர்க்கு நல் சத்புத்திரனாய் வந்தவதரித்த தத்வவேதசாஸ்திரங்களை அறிந்த மகாபக்தனாகவும் இருந்து வருக அப் பக்தனின் சகோதரியாள் ஒருவள் அவளது பூர்வ

பெரும் தபோபலத்தால் சிவ சக்தியே நீயே அவளின் புத்ரியாய் வந்தவதரித்து இவ்வுலக நீதிகளில் சிந்தையற்ற த்ரிகால ஞானியாக தேவியை துதித்து பூஜித்து ப்ரதி தினமும் பாராயணம் செய்துவந்தாய் பெண்மயிலே மனோன்மணியே நீயுமப்போ...

பெண் மயிலே மனோன்மணியே மாணிக்கமே மகாமேருவாய் விளங்கிடும் இந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியும் நீயேயான அன்னமே அப்போ தம்முனிவராகிய பக்தனும் உந்தனை பத்தினியாய் மணம் புரிந்தும் உந்தன் பக்தி அதற்கேதும் பங்கங்கள் அணுகிடாமல் இருபேரும் இருபேரும் மனமுற்றுமே காமக்குரோதமெனும் போகங்களில் சிந்தையற்ற விவேகிகளாக தேவியை பூஜித்து வரும் காலத்தில் ஈசனும் பார்த்து இக்காரணமதை வியாக்கியானம் செய்தும் உங்கள் இருப்பிடம் நாடி வருவதைச்சொல்வேன் ஏந்திழையே கேளுமம்மா

ஈசனும் பார்த்தும் இக்காரணமதை வியாக்யானம் செய்தும் உங்களை காரண ஸ்ரீ புருஷரென்றும் கருத்தினில் ஆராய்ந்தும் அப்போதீசன் பூர்வத்தில் தேவி அவள் மாமுனிவர் அவருக்கு பின்பு மனையாய் வருவேன் என்று உறுதி வாக்களித்த உமையவளாம் இப்போதிந்த நரையினில் புரிந்தும் இவ்வுலக நீதிகளைத்துறந்து நல் உத்தம மாக உத்தமோக்தமம் விவேக பக்தர்களாக இருந்தும் புத்திரசந்தகதிகளற்ற பக்தர்கள் இவர்களுக்கு முக்தி பல பதவிகள் இச்சென்மம் கிட்டிடாதென்றும்

பாட்டு ராகம் : ஹிந்தோளம்

இனியான் காண்பதன்றோ....... இனியான் காண்பதன்றோ....

புனிதப் பொன் பீட சதாசிவ லயமே இனிமை தந்தென் தன் மனம் கவர்ந்த சங்கீத விஜயமே உன்னை இனியான் காண்பதன்றோ

கானம் செய்தென் முன்பில் நின்றாடி மோஹனம்பாடி ஸ்ருதி.....
பிரம்மானந்தத்தாண்டவம் ஆடி அருள் அமிர்த சாகரம் வழிந்தோடி

எனதின் அகமதினுள் நிலைநாடி அமர்ந்து விளங்கிய தத்துவ  ஞான வேத கீத சகலகலா நாத வினோத உனை( இனியான்)

பஞ்ச வஸ்துவால் உன்னை தன்னில் கண்ட மகானின் சொல்லுலகினில்

பகிரங்கமதாய் விளங்க சமோர் பெண்ணுறுவாகி வந்த என் கண்ணின் மணியே.  சந்ததமும் ரீங்காரம் செய்து தொனித்த மனோரஞ்சிதமே  உன் கருணை நயனமும்  மதிவதன புன்னகையும்  என் கருத்தை  உருக்கி சுகிர்தம் அளித்து  மனந்தளித்த  கற்பக கனியே தேனே ஒப்பற்ற ஒளியே திவ்ய  சுப்ரகாசமே உனது அற்புதஸ்வரூபமதின்  அன்பு தத்துவமதின் சித்தமதனில் மகிழ்ந்து  (இனியான்)

பல்லவி

கலையே கருணா சாகர அலையே.. எந்தன் கருத்தில் நிறைந்து நிலை தரித்த சங்கீத இசைக் (கலையே)

அ. பல்லவி

ஞான இன்ப ரச கான மதுர நய வீணா வினோதப்புகழ்ச்சி

ஆனந்தம் அளித்து எனது அகமதில்  உதித்த என்அன்னையின் மோகன காட்சி

ஜெகமதில் அன்னை மகிமை விளங்கும் நிகழ்ச்சி ஜெய ..ஜெய.. அருள் மய.. ஜெய ..ஜெய.. அருள் சீல ( கலையே)

சரணம்

சத்குரு  சாந்தா நந்தமவரது  சத்தியம் விளங்கும் சங்கீதம்- சிவ

சக்தி சிறுவனின் உள்ளம்  உரைத்து திருவாய் மலர்ந்துரைத்த  தேவகான சங்கீதம்.  பல பக்த கோடிகள் பரிந்து ரசித்துருகி  பரவசமடைந்த பேரானந்த  போதம் - ஜீவ முக்தியன்  லோதார

ஓம்கார பஞ்சரத்தின மனோரஞ்சிதம்- தான் என்றும்  அகந்தை முந்தாடும்  ரீங்காரம்  தன்னை அறிந்த ஸ்ருதி நாதம்-  தானே  தானே என்றும் தத்துவ வேதாந்தம் தன்மயம்  தந்த சங்கீதம்  பக்தர்கள் கண்ட

இன்ப விஜய பிரதாபம்  பஞ்சப்பிரேதாசன  ப்ரபாக வைபோக சதானந்தக்  (கலையே)

1.  கன்றிழந்த பசுவது கலப்பால் கரந்திட்டு போகிய போதிலும். அது கடவுளுக்கு ஏற்குமோ அது ஏற்காது, ஏற்காது, ஏற்காது அதுபோல் 2.கற்றுணர்ந்திடாத  காரிகை யானின் புகழ் ஒப்பியது உனக்கு. நாராச ஒலியோ செவியதற்கு ஏறா புகழ்ச்சி அதுவோ  அதுவோ அதுவோ .

3. ஏதும் வகையறியாத ஏழையாகிய யானுன் தாளைப்பிடித்து முன் தஞ்சமென்று. கதறித்தினம் உன்னை வாதனை செய்தேன் என்று என்னை நீ வெறுத்தகன்று. மாயமாய் மறைந்திட்டாயோ என்தன் அன்பே அன்பே...

4. சத்ய முன் கிருபை என்று என் சித்தமதினால் உன்னை கட்டிய துதித்ததல்லும் உந்தன் நிஷ்டை அதற்கு இடையூறோ .நான் செப்பிய புகழ்யாவும் அசுர பிழைகள்தானோ அறியேன் அறியேன்.

5. அன்னாளில் திரவுபதி ஆ!  கிருஷ்ணா. என்றுமவள் கூறி கதறியதற்கு ஆடை அளித்த திருமாலுடன் தேவி நீ பிறக்கவில்லையோ! இந்நாளில் எவ்வாலயத்திலும். உனதுருவம் கருங்கல்லாகிக் காண்பதனால் உள்ளம் திருவருளது சுமக்கவில்லையோ.

6. காளி என்ற உனது வீரியமதையறியா நாரி இடம் காட்டி போராடியதுவும் உந்தன் நீதியோ நீயமர்ந்த ஓம்காரா பீடமதின் வேகமோ. யான் முன்பில் செய்த வினையோ அறியேன். அறியேன்

5. உன் அருள்நிதி என்ற. அவ்வமிர்தமதை கிஞ்சித்தும் உன்அன்பர்க்களித்தால் கனவில் குறையுமோ அத்தனையும் அத்துடன் வற்றிவிடுமோ

6. காளி என்ற உனது வீர்யமதையறியா நாரியிடம் காட்டி போராடிய போராடியததுவும் உந்தன் நீதியோ நீ யமர்ந்த   ஓம்காரபீடமதின் வேகமோ  யான் முன்பில் செய்த வினையோ அறியேன் .அறியேன் .

7. உன் அருள்நிதி என்ற அவ்வமிர்தமதை  கிஞ்சித்துன் அன்பர்க்களித்தால்  அளவில் குறையுமோ அத்தனையும் அத்துடன் வற்றி

விடுமோ.  உன் பொருள் என்ற தத்வ அவ் வஸ்துவை நீ எனக்கு போதித்தால் உனது மகாமேரு கிரியும் வேரற்று விழுமோ.. விழுமோ..

8. எத்தனை சொல்லியான் கத்திய போதிலும் பெற்ற தாயான உன் சித்தமிறங்காததில் மெத்தவும் க்யாதி உண்டோ. பொன் பித்தனாக வாய்ப்பிதற்றி புலம்பியதில் உனக்கு இத்துலகில் அபக்யாதி உண்டோ.

9. கூச்சலிட்டு உன்னை யான் கூவி அழைக்குமென் குரலுமுந்தன் செவிதனில் கேளவில்லையோ ஓச்சல் கொண்டுமெந்தன் கால்கைகள் ஓய்ந்துமென் உள்ளம் நீர் வற்றியும் உனக்கின்னம் நெஞ்சம் என்மீது இளகவில்லையோ.

10. அகலாத நினதன்பு காட்டி அருளமுது ஊட்டி அப்பொருளதை பின் அபகரித்தென்னை நீ புலம்ப வைத்ததும் முறையோ.  நீ சகலவித கலைகளின் தாயாகிய உந்தன் சரணம் கைகொண்ட என்னை உதறித்தள்ளுவதும் சரியோ.

11. பாழாகிய மாய இருளதினில் ஆழ்ந்த அக்ஞானி யான் என்று உனக்கு என்மேல் பாராமுகமோ.  இவ்வீரேழு உலகங்களுக்கு நாம் ஒன்றான வஸ்துவென்றும் உந்தன் சிந்தையில் நிறைந்த அகமோ!

12. அடைக்கலம் என்ற அடைந்த உனதடியார்க்கபயம் அளித்திடவென்று அவனியில் பெண் உருவமாய் அவதரித்த நல் தத்துவ நவரத்தினமே! அற்புதப் பொற்பீடமதில் அமர்ந்திருக்கும் வஸ்துவே அன்பே என் குலகுருவே.  உனையான் சத்யமாய் கண்டு களிகொண்டு மகிழ்ந்துண்டு ருசி கொண்டது உண்மை என்றால் ஓடி இது தருணம் என்னுள் வருவாய் .

13. பறந்தோடி அலைந்தெங்கும் இறைதேடி ஜீவிக்கும் பக்ஷிகளது போல் யான் நின் மலர் நாடி துதி செய்துன் அருள்பாடி தினம் பூஜித்துலகில் வசிக்கும் என்னை கடும் துயர் கொண்டு கதற வைத்ததும் உந்தன் கருணையோ அருளும் இதோ அருளுமிதுவோ.. இதுவோ ..

14. தூண்டியின் முள்ளில் அகப்பட்ட மீன் போல் துடித்தலறி நலமிடும் தோகை முன் துணையாகி உயிர் காக்க கதி நீ , உன் சரணம் .சரணம். உன்னை வேண்டிய அடியாள் யான் என்னை ரக்ஷித்தாட்கொண்டு ஆன உனக்கபயம் இது நல் தருணம் தருணம் .

15. சிவனோடு லயமாகி  சிங்கமதின் மீதில் சித்ரூபமாய் துலங்கும் திரிசூல ஜெய வீரமணியே சிறு நாரியின்  உள்ள நிலை நாடி சுருதி  கூடி புகழ்பாடி பூர்ணக்கலையாய் விளங்கும் அருள்சீலமயமான  மணியே .

16.ஐம்பொருள் என்ற  அவ்வஸ்த்துவை உச்சரித்து அருந்தவ  முனிவரவர் ஆனதின்  ஆத்மமதில் கண்டுமே அறிந்த ஜக காரணி  இவ்வண்டமதை உண்டு பெற்ற  அகண்ட பரிபூரணி  மங்கையென்னில் சங்கீதமாய் வந்த மனமோகினி  அன்பரின் உள்ளம்  கவர்ந்தொளிந்த  அற்புதானந்த மலர் பாதம்  போற்றி போற்றி

மரகத மேனியும்   மலர்முகப்புன்னகையும்  சிவந்த திருவாயும் செம்பவழ  நிற அதரமும்  மின்னலைப்பழித்திடும்  தந்தமதின் ஒளி தகதக  வென்றொளித்திட  கோடி சூர்யகாந்த மயமாய் எங்கெங்கும் வீசவும் பிரகாசமுடன்  அதி மந்தகாசமுடன்  சந்ததமும் ரீங்காரம் செய்யும் சிவசங்கரி எங்கள்  குல கங்கணம் கொண்ட நவ சுந்தரியும் மலர் பாதம் போற்றி போற்றி.

கனவிலும் என்னை இணைபிரியாமல் நிலையாகி ஆட்சியாய் ஆழ்ந்திட்ட  எனதன்னை பரமேஸ்வரி சர்வசாக்ஷியாய் யாவர்க்கும் காட்சி தந்தபயம்  அளித்த கருணாகரி மோக்ஷசாம்ராஜ்ய பதவி தன்னை முறையோடு  அளித்த எனக்கு முக்கனியமுது ஊட்டி சற்குருவாகி போதித்து  தனதுருவமாக்கி கலைகள் பதினாறும் உண்டாக்கி மறுபடியும் பிறவாத  வரமெனக்களித்திட்ட எனது அன்னை வாராகி வைஷ்ணவி சாரங்கி  சாமுண்டி பகவதி பைரவி வீரமுடன் ஆனந்த தாண்டவம் செய்தாடிடும் திரிசூலி  கபாலி மகமாயி ஸ்ரீ காளிகாதேவி நின் மலர் பாதம் போற்றி போற்றி

வெற்றி வீணாயுதமதனை கரமதினில் தாங்கி அதிதீர கம்பீர ரீங்கார தொனியதனை ஓங்கி உன் அக்ஷய ஜெயவென்ற வக்ஷஸ்தலத்தினில் பிரணவ  தத்துவமென்னும் அக்ஷர ஸ்ருதி கானம் செய்து அதி சுகமாகி வீற்றிருக்கும் எனது அன்னை ஸ்ரீ சோடசாக்ஷரி ஸ்ரீ  சிம்மாஸனேஸ்வரி ஸ்ரீ ஸ்ரீரீம்காரி  ஹரீம்காரி சுகுமாரி கௌமாரி ஸ்ரீ கௌரி நின்மலர் பாதமே போற்றி போற்றி

நித்ய கல்யாண வைபோக நிரந்தரி சுதந்தரி ஜெய ஜெய ஸ்ரீமங்கள க்ருபாகரி, ஜெய ஜெய ஜெய ஜெய ஸ்ரீ ஜெய ஜெய மங்கள மனோகரி ஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெய மங்கள சுபகரியின் மலர் பாதம் போற்றி போற்றி.

கற்பகமே கருணைக்கடலே என் கருத்தில் நின்றாடிய இன்பக் கனியே கனியமுதே (கற்பகமே)

ஸற்குருவே ஸகலகலா நாத கீத போதமே அற்புதமே அருள் மயமே சிவலயமே சிங்கவாகன ஜகன் மோகனமே (கற்பகமே)

அருகில் தோன்றி உனதருள் கடலாகி எனதகத்துள் அமர்ந்து கீதம் பாடிய அன்பே அன்பே துதிக்கும் அன்பர்க்கின்பம் அளித்திட வெளிவந்த ஆரமுதே ..அதிதீர கம்பீர ஓங்கார ஸ்வரூபமே திரிசூலம் கரமதில் தாங்கிய வீர விஜய மங்கலமே விஜய மங்கலமே.

மங்கையான் கண்ட மாயா லீலா வினோதமே எங்கள் குல கங்கணமே எனதிசை அமுதந்தன்னை ஆட்கொண்ட தெய்வமே திகமும் ஸ்யாமளமே.

அன்று எமன் முன் தோன்றி நின்றாடி பாடி இன்புற கானம் செய்து எனக்கு இசையமுதும் ஊட்டிய என் இஷ்ட குல குருமணியே ... மட்டில்லா மகிழ்ச்சி எனக்களித்து மங்கையான என் மனக்கோயிலில் ஆழ்ந்த ஜெகன்மாதா மரகதஸ்வரூபிணி சங்கீத கான கானப்ரியாலோலினி ஓம்கார ப்ரணவ பஞ்ச பிரேதாரிணி மனமோகினி பவானி ...

எங்கெங்கும் நிறைந்த பரப்பிரம்மஸ்வரூபிணி ஏழையான் எனக்கு அபயம் அளித்த கருணாமணி ..சதாசிவத்துடன் லயித்த சிம்மாசினி எனதின் அகத்தினுள்ளுதித்த வீர தீர கம்பீர திருசூலினி திருவருள் மணி எனக்ககலாத அன்பளித்து புகலாத புகழ்கலையாகி என்றும் சலியாதெனதென் உள்ளம் நிலையாகி தானான என் தாய்மணி தவமணி நவமணி குகமணி யான் கோரிய வரமெனக்கு வாரி அள்ளி அளித்த நாரணி பரிபூரணி ஜெகத்காரணி ஸகலோகப்ரதாப

உன் மீதென் மனவெறுத்துந்தனை பொய்யென்று இழிவாக நிந்தித்ததொடு கோடி சொற்களுண்டு பின்னுமென் புத்தி கெட்டு பித்தன் யான் உன்னை இனியும் விடுவதில்லை என்று உறுதி

கொண்டுன் திருவடியதை இறுகயிரு கரமதால் பிடித்த யான் உன் அடியாளின் பிழை பொறுத்தருள்வாய்.

அறியாத சிறுவன் யான் செய்த பிழையதையும் உன் அகத்தினால் பாராட்டிடாமல் சீராக நீயுமுன் சிந்தை மகிழ்தோடி வந்தென் எந்தனின் வாக்கினில் நின்று உன் திருவாயதை மலர்ந்துரைத்தும் இச்சரித்திரமதை முடித்துமென்குறையை தீர்ப்பாய்.

விண்ணோர்கள் போற்றிடும் விமலஸ்வரூபியே வீராதிவீரியே வீரகம்பீரியே வீர செங்கோல் தரித்த சோடசாக்ஷரியே உமையே சொர்ணமயமான ஒளியே நாடியான் உன்னை கோரிடும் வரமதை வாரியள்ளிஅளித்தும் எத்துயரும் எந்தெனக் கணுகிடாமல் நீ என் பக்கத்துணையாக நின்றும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அளவற்ற பேரறிவும் பரிபூர்ணமாய் அளித்தும் யான் எத்தனை ஜென்மம் எடுத்த போதினும் போதிலும் நீ என் சித்தத்தில் நின்றும் யான் உன் புகழ்பாடி வருக சிவசங்கரி உன் கருணை புரிவாய்.

1. அகில புவனங்களதை ஈன்றெடுத்த மகாமேருவே ஸகல வேத சாஸ்திர புராண தத்வங்களுமாகிய மகாதேவியே நின்னடி மலர் போற்றி போற்றி ஜெகஜ்ஜோதி சுடர் ஒளியே ஸகஸ்ரநாம ஸ்வரூபியே ஸ்ரீ ஆதிபராசக்தியே நின்னடி மலர் போற்றி போற்றி.

2. ஈரெட்டு கலைகளோடு கலைகளோடிரு நான்கு கரங்கள் கரங்களுடன் ஏகமுகமாய் பூர்ண சுதந்திரனை போல் துலங்கி சீரியே கர்ஜிக்கும் சிங்கம் அதை வாகனமாய் கொண்ட ஜெகஜ்ஜாலி ஜெகஜில்லி ஜெகத்மோகினியே ஸ்ரீ சோடசாக்ஷரியே நின்னடிமலர் போற்றி போற்றி

மாதங்கி மதுசாலி சாரங்கி சாமுண்டி சாமளி கோமளி விமலி கமலி திரிபுரசுந்தரியே நின்னடி மலர் போற்றி

நித்தியகல்யாணி நிரந்தரி சம்பூர்ண கருணாகடாக்ஷி சமஸ்த்த மங்களங்களை அளித்திடும்

சிவசங்கரியே நின்னடி மலர் போற்றி போற்றி

3. அறியாத சிறுவன்யான் செய்திடும் பிழைகள் அதையும் உந்தன் புகழன்று நீ எனக்கு போதிக்க குருவாக  வந்தருள் புரிகுவாய்  எந்தனை ஈன்ற தாயே  எந்தன் கவலைகளை  வதம் செய்து காலனையும் வென்றிடும்  மூல மந்திரங்களாக நீ என் கருத்தினில்  குடிகொண்டு வந்தருள் புரிகுவாய் எந்தனை ஈன்ற தாயே எந்தனை ஈன்ற தாயே .

எந்தன் நாவு தன்னில் நவசக்திகளாக உன்  கை சூலத்தோடோங்கியே நின்றருள் புரிகுவாய்  என்தனை ஈன்ற தாயே.. தாயே..  தாயே ..

4.  என் உற்றோர் பெற்றோர் பிறந்தோர் மக்கள் மற்றுமனைவர்க்கும்

எம மிர்ச்சியும் மிருத்து யம பய மந்நிறியில்  சுத்தியே  சூழ்ந்தவர்கள் பக்தமதினில்  துணையாய்  பாதுகாத்து ஆதரிப்பாய் என்தனை ஈன்ற தாயே... தாயே...

சீலன்மார்க்கண்டன் முன்பு சிவன் அருள்  பெற்றது போல் இப்பாரினில் நாரியாள் உன் அருள்  பெற்றிட கோரினேன்  அளித்துமெனக் கு அனுக்கிரகம் செய்தருள் புரிகுவாய் எந்தனை ஈன்ற தாயே..  எந்தனை ஈன்ற தாயே..

சத்ரு சம்ஹாரிணியே  சந்த  ஜனசம்ரக்ஷணியே உந்தன் சரணத்தில் அனந்தகோடி வந்தனம்  வந்தனம்.... வந்தனம் எத்தனை ஈன்ற தாயே.

1. பொல்லாத  வஞ்சககர்கள் நெஞ்சையுடைய  சண்டாளி என்றும் உன்னை  முந்தியான் அறிந்திடாமல் நம்பியே மோசம் போனேன் கல்லாத கசடனாகிய யான்  எனக்குன் ஆசை காட்டி மறைந்தொளித்த  கள்ளி நீ என்று உன்னை வெறுத்தென் மனம்  கலங்கி கதறியே வருந்தலானேன்.

2.  உன்னாசை காட்டி என் உள்ளமதில் நின்று பல உத்தமர்களுக்கெடுத்துரைத்த நல் தத்வ வாக்கியங்களதை முற்றிலும் உரைத்திடாமல் மோசம் செய்தொளிந்திருப்பது  இது உனக்கு கோடி பசுக்களதை கொன்ற பாதகம் உனை  கார்க் கும் பெண் பேதை ஆகிய எந்தனை வாதனை செய்தது போதும்.. போதும்.. தானேன்.. தானேன்.. தானேன்..  ஓடி வந்தெந்தனின் உள்ளமதில் நின்று உன்திருவாய் திருவாய்.. திருவாய்   திருவாய்.. திருவாயதை மலர்ந்துமிப்போ ஒப்புவாய் இவ்வுலகமதெங்கெங்கும்  விளங்க ஒப்புவாய்.

3. எத்தனையோ விதம் எடுத்துரைத்து யான் கதறிய போதிலுமுந்தன் சித்தமதில் கிஞ்சினும் இரக்கமற்றிருப்பது உனக்கு ஆகாது.. ஆகாது. ஈன்றெடுத்த தாயவள் தன் பாலகனோடு பகைத்தெதிர்த்து ஜீவ வதை செய்து கொன்ற பாதகமுன்னை சுற்றிடும் இதுவே சத்தியம் இனியும் யான் உனக்கு எவ்வகையிலும் எடுத்துரைப்பதற்கு ஏதுமில்லை எந்தனின் எந்தன் ஊட்டியதினில் உந்தனின் கரமதிலுள்ள விஜய சீலாமணி வேத வேதாந்த தத்வ ஞான போதனி நளினி நாராயணி நமோஸ்துதே.
என் இரு கலை இன்னிசையமுதாகி இனிக்குதென் உள்ளம் இன்பத்தேன் உருவாகி இனிக்குதென் உள்ளம் தொனிக்குது செவியில் சிவனோடு என்றோங்கி( என் இரு)

1. கருணையே உருவமாகி கரத்தில் திருசூலம் தாங்கி சிறுவன்யான் என் முன்பில் தோன்றி என் சிந்தை கவர்ந்த சிங்கவாகினி ஜெகன்மோகினி பவானி கருணை வடிவம் கொண்ட அருள்மயமே என் கருத்தில் நிறைந்த இன்ப சாகரமே ஞான சுகிர்தம் அளித்த மனமோகனமே.

2. இன்பமே பெரு வெள்ளமாகி இனித்து நல் தேனுமாகி, எண்இரு கலை உண்டாகி ஹ்ருதயத்துள் தானுமாகி எனக்கு இஷ்ட வரம் அளித்திட்ட அஷ்டபுஜ அன்னையின் திருவருள் மகிமை மகிமையின் பெருமை....
தன்மயம் தந்த என் தாய்மணியே அருந்தவத்தில் வந்துதித்த ஸத்குருமணியே தவத்தில் வந்துதித்த ஸத்குருமணியே சதாசிவத்துடன் லயித்த சிம்ம சிம்மாஹாசினியே..
தன்னையே மறந்த பெரும் தவத்தினால் சாந்தானந்தம் தனக்குள் கண்டு கொண்ட தேஜோமயப்பிரகாச திவ்யமங்கள ஸ்வரூபம் ஞான நடனம் புரிந்து வந்தென் நாவினுள் உறைந்த ஓங்கார ப்ரணவ தத்வ பிரபாக வைபோகம்.
ஓம் சக்தி ஜெய ஜெய பார்வதி சங்கரி ஓம் சக்தி ஜெய ஜெய பகவதி சாம்பவீ ஓம் சக்தி ஜெய பகவதி சாம்பவீ ஓம்கார சக்தி நித்யமங்கள் கௌரி.

மரகதமே உந்தன் மலரிணை என்றுமே மறவாத வரம் தந்தருள்வாய் தாயே( எந்தனுக்கே) (மர)
அருள் குகமே எனதின் அன்பின் மன ரஞ்சிதமே பஞ்சப்பிரேதங்கள் சுமந்த சதாசிவ மஞ்சத்தில் அமர்ந்துமென் மனதினுள் உதித்த (மர)
ஞான நடனம் புரிந்து கான இசை பொழிந்தென் மன கோயில் கொண்ட ஜெகன்மோகனமே உந்தன் வீர விஜய திரிசூலம் ஹ்ருதயமதில் வீணையதாய் சுருதி மீட்டிய என் தெய்வமே..
ஓம்கார பஞ்சரத்னமெனும் ரகஸ்ய மந்திர ப்ரவாகமென் சிந்தையுள் சுரந்து எண்ணிரு கலைவளர்ந்து இன்னிசை வடிவாக வந்த (மரகதமே)

வீணில் வாது செய்வதேனம்மா இவ்வேழை மீதில் ( வீணில்)

1. தேனிலமர்ந்ததோர் ஈயது போலுன் தாளில் கவர்ந்த பெண் பேதை என் மீதில் (வீணில்)

2. தள்ளத்தள்ள உனது தாளை பிடித்த என் மேல் எள்ளளவேனும் நெஞ்சிரக்கமன்றியில் எதிர்த்து என்னுடன்( வீணில்)

3. ஆசைக்காட்டி என்னை மோசம் செய்து வஞ்சித்து அளித்த உன்னருள் திருவருளை அபகரித்து காட்டி மறைத்துமென்னை கைவிட்டகல நின்று கன்றையிழந்த பசுவது போல் கதறவைத்தெந்தனை( வீணில்)

மங்கள கௌரி கல்யாணி ஜெய ஜெய (3 தடவை)

மகா தேவப்ரிய ஜெகஜ்ஜனனி மனோன்மணி (மங்கள)

1. அன்றுயான் கண்ட என் தாய் மணி ( 2 தடவை )
எனக்கருளமுதளித்து என் அகமதில் உதித்து சத்குருவாகி போதித்தென் மனக்கோயில் கொண்ட அதிதீர கம்பீர திரிசூல ஜெய வீர சிம்மாஸனி பவானி மனமோகினி (மங்கள)

2. மோகனரூபி மூவர்க்கும் முதல்வி ஞான நடனம் புரிந்தாடும் சிங்காரி அலங்காரி ஓம்காரி ஸ்ரீ ஆதிபராசக்தி சங்கரி அசுரனை வதைத்த அதிகோரபயங்கரி என் இசை வடிவாகி ஹ்ருதயத்தில் வசிக்கும் க்ருபாகரி அசைவற்ற கலையாய் வளர்ந்தமர்ந்த கருணாகரி என்றும் ஆட்சி புரிந்தாட்கொண்டு கார்க்கும் பரமேஸ்வரி சர்வேஸ்வரி ஸ்ரீ சோடாசாக்ஷரி மகேஸ்வரி (மங்கள)

3. பெண் பேதை மனம் வருந்தி புகழ்பாடும் குரலதை கேட்ட மண்ணும் உருகி மரமது பால் சொறியுமென்பார் நீ ...
பொல்லாத வஞ்சகி அதனினால் உன் மனம் கல்லாய்ச்சமைந்து என்னை கலங்க விட்டகல நின்றாய் தெய்வமே .... தெய்வமே...

4. மகாமேருவாய் விளங்கி ஜெகங்களுக்கோர்ரொளியுமாகி சிறு ஹ்ருதய கமலமதினில் வசிக்கும் மரகதமே உந்தன் திருவாய் மலர்ந்துறைத்ததோர் திவ்ய கருணாம்ருத சரித்திரமதையும் முடியவும் துறந்துரைத்து முன் மகிமையை இவ்வுலகங்கள் எங்கெங்கும் அறிய அறிவதென்றோ என்றோ...

5. அஷ்டாக்ஷர பொருளாக இந்த அகிலமெங்கெங்கும் நிறைந்த ஸகல சக்தியே முக்திக்கு வித்தாகிய தத்வ பொருளே உன் தத்வமதை எந்தனின் வாக்கில் எடுத்தூட்டி நிலை நாட்டினேன் என்றுரைத்து எங்கு சென்றொளிந்தாய் இப்போ சின்மயரூபியே சோடசாக்ஷரியே உமையே .. உமையே..

6. ஆதியும் அந்தமுமற்ற ஜோதிப்ரகாசியே கார் நீயே ஒளியே நீயே என் மாய இருளதை நீக்கியே உன் ஞான ஒளியதை அளித்தும் எந்தன் ஹ்ருதயத்தினில் பரிபூர்ணமாக என்றும் சலியாமல் வசிப்பாய் நீ சங்கரி...சங்கரி...

விருத்தம்

1. இது காலமாக யானுந் கழலடி அதை நாடியும்...
பல புகழ் பாடியும் பலனேதும் அடைந்திலேன்..
அல்லும் பகலுமாய் என் அன்னையே அன்னையே

2. என்றுன் கன்றைப் பிரிந்தலைந்து கதறியதோர் பசுவது போல் யான் கத்தியும் என்மேல் கிருபை கிஞ்சித்தும் வரவில்லையே..

3. சக்தியே யான்உந்தனை சதமென்றெண்ணி சத்தியமாய் கார்த்து ஆதரிப்பவள் நீ என்றுன்னை நம்பி நத்தியே துதித்திடும் பெண் பேதையான் என் மீதிறங்காதவள் நீ கரும் கல் என்று உன்னை வெறுத்தேனே.

4. ஈன்றதாய் நீ என்று யான் என் குறையதை உரிமையாய் முறையிட்டலரியும் செவியினில் கேளாத மௌனமாய் இருப்பவள் நீ சதிகாரி என்று வெறுத்தேனே..

5. கடும் பசியதால் மெலிந்தவர் அவரின் அன்னமிட்டு கலந்தவர் எடுத்துண்டிடும் கையதை பிடித்தது போல்..

6. எடுத்தும் நீ எந்தனின் வாக்கில் ஊட்டியதோர் நல் தத்துவமதையான் கூட்டியே விழுங்கி மகிழ்ந்தெடுத்துரைத்திடும் நல் தருணத்தில் நீ காட்டிய தத்வமதை பூட்டகமாய் மறைத்தொளித்தவள் நீ கொடிய சண்டாளி என்றுன்னை வெறுத்தேன்...

7. மாயாவியாய் நீ என் முன் மோகினி அவள் போல் வந்தென் மாய இருளாகிய இம்மண்ணாசை அதை மறைத்து உன் ஆசையை காட்டி

பின்னும் என்னை மோசம் செய்து பெண்ணான பேதையான் என்னை கொல்லாமல் கொன்று எங்கு சென்றொளிந்தாய் இப்போ தெய்வமே ..தெய்வமே

8. பாரில் இச்சரித்ரமதையான் பாடி முடித்துரைத்திடாமல் வீணில் நீ எத்தனை நிர்மூடமாக படைத்தே காயம் நிலையற்ற மாயக வலையதில் தள்ளியும் இப்பாழாகிய சாண் உடலென்ற கும்பி அதற்குணவுகள் தேடியும் எத்தனை பரிதவித்திடவைத்தாயே தெய்வமே.. தெய்வமே..

9. அடுத்துன்னை போற்றிடும் அடியார்களின் அகத்தினில் நின்று பஞ்ச அறிவதை அளித்திடும் கருணைக்கடல் நீ என்பதும் பொய் திடத்துடன் சிந்தையில் உன்னையே தியானம் செய்து தவம் புரிந்திடும் மகாமுனிவர் அவர்கள் தன்னையே தானறிந்து தனக்குள் உன்னை அவர் கண்டறிந்தாரன்றி தரணியோர் சொல்வதும் பொய் ..பொய்.. பொய்...

10. சரணமுன் தஞ்சம் என்ற ஸர்வஜனர்களை ரெக்ஷிக்கும் ஸர்குண தயாபரி நீ என்பதும் பொய் புத்தி அறிவற்ற நிர்மூடனாகிய காளிதாஸனின் நாவினில் உன் அக்க்ஷரங்கள் அதை உரைத்தவள் நீ என்பதும் பொய்... பொய்... பொய்...

11. அண்ட பிண்ட சராசரமெங்கும் ஒன்றாக நிற்பவள் என்பதும் பொய் எண்டிசை எங்கெங்கும் ஜெயித்து வென்றவள் நீ என்பதும் பொய்..

12. பொல்லாத பண்டாசுரனை வதைத்தவள் நீ என்பதும் பொய் இல்லாத ஏழைகளுக்கிரங்கி என்றும் குறையாத நிறை படியளப்பவள் நீ என்பதும் பொய்...

13. எவ்வகையும் பொய்யென்னு என் மனம் சென்று கலங்கியும் தயங்கும் என் மீது இன்னமும் பாராமுகமாக நீ இருப்பதும் இதுவென்ன தருமமோ நியாயமோ இதுவும் உன் மாயந்தானோ

14. யான் முன் செய்த பாபமோ என் மீதில் தாபமோ இது உன் சூதுதானோ.

**ஸ்ரீ காமாட்சி சரணம்**